Sp/Edumin/Edu/4/1 2024.03.07

எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் சித்தயடைந்த சகல பட்டதாரிகளுக்கு,

**<u>தென் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரி ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - I (அ) தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல்</u>**

**<u>சாதாரண நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை தொடர்பானது</u>**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிட்ட எழுத்துப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் தகைமைகளை பரீட்சிப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் மற்றும் பிரயோகப் பரீட்சைகள் *2024.03.15* ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் அது தக்ஷினபாய அமைச்சுத் தொகுதியில் (முதலாம் மாடி, **தக்ஷினபாய அமைச்சுத் தொகுதியில்**, லபுதுவ, காலி) நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கேற்ப குறித்த திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் சமூகம் தருமாறு அறியத்தருகின்றேன். மேலும் குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் **தங்களினால் உண்மைப் பிரதிகள் என உறுதிப்படுத்தி**, **தங்களின் தொடர் இலக்கம்** (இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்ட தங்களின் பெயருடன் தொடர்புடைய தொடர் இலக்கம்), **பரீட்சை இலக்கம்**, **முதல் எழுத்துக்களுடனான பெயர்**, **தேசிய அடையாள அட்டை இலக்கம்** மற்றும் **பிரதேச செயலகப் பிரிவு** என்பவற்றை இடதுமேல் மூலையில் இட்ட காட்போட் கோவை ஒன்றில் கீழ் காட்டப்பட்டுள்ள ஒழுங்கில் வைத்து எடுத்து வருதல் வேண்டும்

1. தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் (பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)
2. க.பொ.த (சா.த / உ.த) சான்றிதழ்களின் மூலப் பிரதிகள்
3. பட்டச் சான்றிதழ் மற்றும் விளக்க பட்டச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் *(Degree Certificate and Detail Certificate)*
4. ஆறு மாத காலத்திற்குற்பட்ட நற்சான்றுகள் *2* (இவற்றில் ஒன்று **தங்களின் வசிப்பிடத்திற்கு உட்பட்ட கிராம**

**உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.)**

5. **தங்களின் வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் வகையிலான கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் *(DS 04).* அதில் தங்களின் விலாசம் மற்றும் வசிப்பு எப்போதிலிருந்து என்பது குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.**

   **அதன் போது தாங்கள் விண்ணப்பிப்பது தங்களின் வாழ்க்கை துணையின் வதிவிடத்தின் அடிப்படையில் எனின்** அவரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழுடன் திருமண அத்தாட்சிப் பத்திரம் சமர்பிக்கப்பட வேண்டும். (உங்களின் நிரந்தர வதிவிடத்தை தென் மாகாணத்திற்கு மாற்றம் செய்திருப்பின் வாழ்க்கைத் துணையின் வதிவினை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழுடன் தங்களின் வதிவினை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழும் முன்வைக்கப்பட வேண்டும். இதுவரை தங்களின் வதிவினை தென் மாகாணத்திற்கு மாற்றம் செய்திருக்காவிடின் அதனை விரைவில் மாற்றம் செய்வதாக சத்தியக் கடதாசி மூலம் உறுதிப்படுத்த வேண்டும்)
6. அவ்வாறே மேற்குறிப்பட்ட சகல ஆவணங்களும் தகைமை பரீட்சிக்கும் நாளிலே முன்வைக்கப்பட வேண்டும். பின்னர் முன்வைக்கப்படும் ஆவணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. நீங்கள் விண்ணப்பித்த பாடத்துடன் தொடர்புடையதாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு *05* நிமிடத்திற்குள் தெரிவு செய்யப்பட்ட தலைபொன்றின் கீழ் முன்வைப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்களின் முன்வைப்பிற்காக பயன்படுத்த முடியாது. வகுப்பறையில் மேற்கொள்ளக்கூடிய கற்றல் கற்பித்தல் முறைமைகளுக்கு இனங்க கற்றல் துணைகளை பயன்படுத்திக்கொண்டு முன்வைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. நேர் முகப்பரீட்சையில் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் பிரயோகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர்
9. நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீடசைக்கு தங்களுக்கு வழங்கப்படும் நேரத்திற்கு *15* நிமிடங்களுக்கு முன்னரே தக்ஷினபாய அமைச்சுத் தொகுதிக்கு வருகை தருதல் கட்டாயமானது.
10. நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீடசைக்கு அழைக்கப்படுவதானது நியமனம் வழங்களுக்கான தகுதியாக ஒருபோதும் கருத முடியாது.

11. நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சைக்கான திகதி, நேரம் மற்றும் நேர்முகப் பரீட்சை குழு இலக்கம் தொடர்பான விபரங்கள்

எதிர்வரும் நாட்களில் இந்த இணைய தளத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ரன்ஜித் யாபா
செயலாளர்.

## <u>பிரயோகப் பரீட்சை முறைமை</u>

*(i).* பிரயோகப் பரீட்சைக்காக *05* நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும் என்பதுடன் நியதிகளின் நோக்கங்கள் பின்வருமாறு.

நியதிகளின் நோக்கங்கள் :

| | | |
|---|---|---|
| **i** | நோக்கமும் பிரவேசமும் | வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல். |
| **ii** | ஆளுமை மற்றும் குரல் வளம் | ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த குரல் வளப்பிரயோகத்தினை மதிப்பீடு செய்தல். |
| **iii** | தொடர்பாடலில் தெளிவு | கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல். |
| **iv** | நேர முகாமைத்துவம் | பெற்றுக் கொள்ளப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல். |
| **V** | சமர்பிப்புத் திறமைகள் | நோக்கத்தை எட்டுவதற்கான சமர்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல். |

(ii). இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் | பிரயோகப் பரீட்சையில் புள்ளி | உயர்ந்த | சித்தியடைவதற்கு |
|---|---|---|---|

| இல. | வழங்கப்படும் நியதிகள் | பட்ச புள்ளி அளவு | தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01. | நோக்கமும் பிரவேசமும் | 05 | 02 |
| 02. | ஆளுமை மற்றும் குரல் வளம் | 05 | 02 |
| 03. | தொடர்பாடலில் தெளிவு | 05 | 02 |
| 04. | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05. | சமர்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **25** | **10** |